**இலங்கை மின்சா சபை ஓய்வூதிய நிதியம் - 2022**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மின்சா சபை ஓய்வூதிய நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நலனாளிகளுக்காக உள்ள தேறிய சொத்துக்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நலனாளிகளுக்காக உள்ள தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியின் 14(1) ஆம் பிரிவு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளை பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது

தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்கமை**

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| 2003 திசெம்பர் 31 ஆந் திகதிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட ஓய்வூதிய நிதிய பிரமாணங்கள் | | | |
| விதி 18 | விதிகளிற்கான திருத்தங்கள் காலத்திற்கு காலம் சபை தீர்மானமானங்கள் மூலம் இலங்கை மின்சாரசபைக்காக சட்டபூர்வமாக்கப்பட வேண்டியதுடன் ஏதாவது திருத்தம், வேறுபாடு, மாற்றம், குறித்துரைப்பு அல்லது உத்தரவளிக்கும் மேற்கொள்ளும் நேரத்தில் விதிகள் அல்லது அவற்றில் ஏதாவது தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைரி திளைக்கணத்தின் அனுமதிக்கு உட்படுத்த வேண்டும். ஏவ்வாறாயினும், திருத்தங்களை வர்தமாணி அறிவித்தல் ஊடாக வெளியிடப்படாமல் உள்ளன. | | |
| | அ) நிதியம் சபை அனுமதியில் 2015 மற்றும் 2021 இல் ஓய்வூதியக் கொடுப்பனவை முறையே 15 சதவீதம் மற்றும் 12.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | ஓய்வூதிய நிதிய பிரமாணத்தின் 23.2, 23.3 மற்றும் 23.4 ஆம் திருத்தப்பட்ட விதிகளின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் சபையால் வழங்கப்பட்ட அனுமதிப் பிரகாரம் ஓய்வுதிய கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. | ஓய்வூதிய நிதிய பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆ) நிதியமானது 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் மூலம் 2021 சனவரி மாதத்திலிருந்து 2020 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் ஓய்வூ பெற்ற ஓய்வூதியர்களிற்காக மாதம் ஒன்றிற்கு ரூபா 10,000 முதல் ரூபா 15,000 வரை சகலதையும் உள்ளடக்கிய ஆகக்குறைந்த மாதந்த தொகையை அதிகரித்திருந்தது. | ஆகக்குறைந்த ஓய்வூதிய பெறுகைகளின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு சபையானது அவர்களுடைய சகலதைம் உள்ளடக்கிய ஆகக்குறைந்த மாதந்த ஓய்வூதியத்தை மாத்திரம் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது. | -மேற்படி- |
| இ) நிதியானது 2022 மார்ச் 22 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் மூலம் 2021 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் ஓய்வூபெற்ற ஓய்வூதியர்களிற்காக 10 சதவீதத்தால் ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. | மேற்குறித்த ரூபா 15,000 அவர்களுடைய மாதாந்த ஓய்வூதியம் பெற்றிருந்த ஓய்வூதியகாரர்களிற்காக 10 சதவீத அதிகரிப்பும் சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தது | -மேற்படி- |
| ஈ) 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதிய சபை தீர்மானம் மூலம் மருத்துவ கொடுப்பனவுகளாக 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்காக ஆறையே ரூபா 123.5 மில்லியன், ரூபா 132.7 மில்லியன், ரூபா 142 மில்லியன், ரூபா 150.6 மில்லியன் மற்றும் ரூபா 154.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதிய நிதிய பிரமாணத்தின் 23.2, 23.3 மற்றும் 23.4 ஆம் திருத்தப்பட்ட விதிகளின் பிரகாரம் ஓய்வூதியகாரர் களிற்கான மருத்துவ கொடுப்பனவு திட்டம் இலங்கை மின்சாரசபையின் சபையால் அனுமதிக்கப்பட்டது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வரிக்கு பின்னரான தேறிய அதிகரிப்பு ரூபா 2,863 மில்லியனாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நேரொத்த நிதியத்தின் வரிக்கு பின்னரான தேறிய அதிகரிப்பு ரூபா 1,079 மில்லியனாகும். ஆகவே, நிதிசார் விளைவுகளின் ரூபா 1,784 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வட்டி வருமான அதிகரிப்பு மற்றும் திரண்ட ஓய்வூதிய கொடுப்பனவு வீழ்ச்சி என்பனவே முன்னேற்றத்திற்கான காரணங்களாக இருந்தன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 53,968 மில்லியன் எதிர்கால பொறுப்பு தீர்ப்பனவு தொடர்பில் முன்னைய ஆண்டு பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது 16.65 வீழ்ச்சியை காட்டுவதனால் மீளாய்வாண்டிற்காக ரூபா 11,858 மில்லியன் பற்றாக்குறை இருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், ஓய்வூதிய விதிகளின் ஏற்பாடுகளிற்கு முரணாக ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் வைத்திய கொடுப்பனவுகள் போன்ற ஓய்வூதிய நலன்களின் அதிகரிப்பு இந்த பறாக்குறையை விளைவித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

அதிகரிப் அல்லது வீழ்ச்சியின் சதவீதங்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது பின்வருமாறுள்ளன.

| வருமானம் / செலவினம் | 2022 | 2021 | அதிகரிப்பு) / (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| முதலீட்டு வருமானம் | 3,825 | 1,688 | 2,137 | 127 |
| ஓய்வூதியகருக்கு செலுத்தபட்ட நலன்கள் | 3,090 | 3,002 | 88 | 3 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 இல் என்ரஸ் செக்குறீரீஸ் PLC ஊடாக திறைசேரி முறிகளில் ரூபா 400.4 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியானது நிதியத்தின் அனுமதி இல்லாமல் முதலீட்டினை மீளப்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2015 இல் இலங்கை மின்சார சபை உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வில் இலங்கை மதிதிய | இலங்கை மின்சார சபை 2015 ஆம் ஆண்டில் இந்த விடயத்தை ளிப்படுத்தியதுடன் 2015.12.09 இ பெறவேண்டிய முதலீட்டு தொகையை அறவிடுவதற்கு FCID இற்கு உடனடியாக முறைப்பாடு செய்திருந்தது. பின்னர், நீதவான் நீதி மன்றத்தில் என்ரஸ் செக்குறீரீஸ் PLC எதிராக 290/2016 ஆம் இலக்க வழக்கை தொடுத்திருந்தது. | (i) ஏதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வகளை தவிர்ப்பதற்கு முறையான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை உறுதிப்படுத்த வேண்டும்.<br>(ii) ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு சகல நியாயமான |

வங்கி மூலம் பெறப்பட்ட (லங்கா பாதுகாப்பு முறைமை) உறுதிப்படுத்தல் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தின் பெயரின் திறைசேரி முறிகள் எதுவும் இருக்காமை வெளிப்பட்டது. எவ்வாறாயினும், சபையானது 2 ஆண்டுகளிற்கு மேலான தாமதத்துடன் 2018 இலேயே முதிர்வு திகதியில் அட்டுறு கூட்பன் வட்டியுடன் முதலீட்டை அறவிடுவதற்கு என்ரஸ் செக்குறீரீஸ் PLC இற்கு எதிராக சிவில் வழக்கினை தொடுத்திருந்தது. எவ்வாறாயினும் அந்நேரத்தி சேவையாற்றிய பொறுப்புடைய நிதிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் அவர்கள் இலங்கை மின்சார சபையிலிருந்து ஓய்வுபெற அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மேலும், பிரதம உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் இலங்கை மின்சார சபை தலைவர் TOR இன் கீழ் இந்த விடயம் மீது ஆய்வுசெய்வதற்கு குழுவொன்றை நியமித்திருந்தார்.

குழுவானது எவ்வித சான்றுகளும் கிடைக்காமையால் தவறாக பயன்படுத்தல், மோசடி அல்லது ஊழலின் கீழ் இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள் சாட்டுதல் செய்யப்படவில்லையென இனங்கண்டு அறிக்கையை சமர்ப்பத்திருந்தது.

இலங்கை மின்சார சபை மாவட்ட நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள DMR 1029/2018 ஆம் இலக்க வழக்கின் மூலம் என்ரஸ் செக்குறீரீஸ் PLC இற்கு எதிரான நடவடிக்கைகை அறிவுறுத்தியிருந்தது.

நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதென உறுதிப்படுத்த வேண்டும்.

(iii) அவர்களுடைய கவனக்குறைவிற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.